## அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரி, சிவகாசி

## தேசிய நூலக தின விழா

சிவகாசி அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரியில் "தேசிய நூலக தின விழா" 12.08.2022 அன்று கொண்டாடப்பட்டது. விழாவில் கல்வி அதிகாரி எம். புகழ் வரவேற்றுப் பேசினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் எம். நந்தகுமார் தலைமையேற்றுப் பேசினார். நூலகம் என்பது பல நூற்றாண்டு அறிஞர்கள் நூல் வடிவில் கூடியிருக்கும் இடம். வருங்கால அறிஞர்கள் படைத்தளிக்கப்போகும் புத்தகங்களைத் தாங்கி நிற்பதற்காக காத்திருக்கும் அறிவுத் திருக்கோயில். இந்த கோயிலின் கதவுகள் மாணவர்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கிறது. ஒவ்வொரு மாணவரும் வந்து படித்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 29 வெவ்வேறு தமிழறிஞர்கள் உரை எழுதிய 90 திருக்குறள் புத்தகங்கள் தமது கல்லூரி நூலகத்தில் உள்ளதாக பெருமையுடன் கூறினார்.




நூலகர் முனைவர் C. ராமசுப்பிரமணியன் பேசும்போது அனைத்து துறை மாணவர்களும் படித்து தங்கள் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை தீர்த்துக்கொள்வதற்காக மொத்தம் 30,500 புத்தகங்களும் பக்தி மற்றும் பொது அறிவு நூல்களும் டி.என்.பி.எஸ்சி, ரயில்வே போன்ற போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதற்கான நூல்களும் இருப்பதாக தனது உரையின்போது குறிப்பிட்டார்.

விழாவை முன்னிட்டு கனைக்ஷன் வினாடி-வினா போட்டி (Connection-Quiz), புத்தகங்களுடன் போர் போட்டி (Battle Of Books), திருக்குறள் கண்டு பிடித்தல் போட்டி (Track Kural) ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டது. மொத்தம் 146 மாணவர்கள் கலந்து கொண்ட இந்தப் போட்டிகளை முதலாம் ஆண்டு துறைத்தலைவர் எஸ்.வி.இளங்கோவன், திருமதி. பெமில், ஆங்கில விரிவுரையாளர், ஆர்.ரவிசந்திரன் மெக்கானிக்கல் விரிவுரையாளர் ஆகியோர் நடுவர்களாக இருந்து நடத்தினர்.

கனைக்ஷன் வினாடி-வினா போட்டியில் முதல் பரிசு இரண்டாம் ஆண்டு அச்சுத்துறை மாணவர்கள் திணேஷ்கிருத்திக், மற்றும் அச்சுதுறை விணேத்ராஜ் ஜோடியும் இரண்டாம் பரிசை முதலாம் ஆண்டு மாணவர்கள் கவிபாலன், கார்த்திக் ராஜா ஜோடியும், மூன்றாம் பரிசை அச்சுத்துறை இரண்டாம் ஆண்டு முகம்மத் அஷ்பாக், முகம்மத் இம்தியாஷ் ஜோடியும் பெற்றனர்.

*தொடர்ச்சி..2..*

புத்தகங்களுடன் போர் போட்டியில் லோகித் மூன்றாம் ஆண்டு மெக்கானிக்கல், திணேஷ் கிருத்திக் இரண்டாம் ஆண்டு அச்சுத்துறை, வேல்பாண்டி, சாரதி இரண்டாம் ஆண்டு சிவில், கவிபாலன் முதலாம் ஆண்டு ஆகியோர் வெற்றிபெற்றனர்.

திருக்குறள் கண்டு பிடித்தல் போட்டியில் சாரதி இரண்டாம் ஆண்டு சிவில், ரூபாதி இரண்டாம் ஆண்டு கணிப்பொறியியல், மாரீஸ்வரன் இரண்டாம் ஆண்டு அச்சுத்துறை, கரையாண்டி மூன்றாம் ஆண்டு மெக்கானிக்கல் ஆகிய மாணவர்கள் வெற்றி பெற்றனர். வெற்றிபெற்ற மாணவர்களுக்கு புத்தகங்கள் பரிசளிக்கப்பட்டது.

விழா நிறைவில் உதவி நூலகர் மாரிமுத்து நன்றி கூறினார். விழாவுக்கான ஏற்பாடுகளை உதவி நூலகர் ஜெயலட்சுமி செய்திருந்தார்.

முதல்வர்